# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்

மார்ச் 2025 - குடில் 7 - விருந்து 24



தமிழ்த்துறை, சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

கல்லூரிச் சாலை, சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099

044-26863177, 9677717455, 9677717456, sokatamilavai2023@gmail.com, sokaikeda2000@gmail.com

# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய மின்னிதழ்

## தமிழால் தழைக்கும் உலகு

குடில் 7
விருந்து 24
மார்ச் 2025

தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
கல்லூரிச் சாலை, சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்


ஆசிரியர் குழு : வி. மாரிகவிதா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு
அ. உமா மகேஸ்வரி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
ஏ. ரம்யா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
கா. சுவாதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்



வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
கல்லூரிச் சாலை, சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.



*Blog : sokatamil blogspot.com*
*Facebook : Soka Tamil Avai*
*Youtube : Sokatamilavai*
*E.mail : sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

*தமிழால் தழைக்கும் உலகு*

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

குடில் 7

விருந்து 24

மார்ச் 2025

# உள்ளே....

ஹைக்கூ அறிமுகம்

மரங்களும் மலர்களும்

மாணவியர் ஹைக்கூக் கவிதைகள்


துறை நிகழ்வுகள்

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறையில் நடைபெற்ற இரண்டு நாள் ஹைக்கூக் கவிதைப் பயிலரங்கின் பயன் இப்படைப்பு.

பயிலரங்கில் மாணவியர் பெற்ற பயிற்சியின் விளைவாக விளைந்த ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பாக இம்மாத நற்றமிழ்ககுடில் இதழ் வெளியிடப்படுகிறது.

# ஹைக்கூ

சீன மற்றும் ஜப்பான் மொழியின் கலவையாக கி.பி. 1603 ஆம் ஆண்டு முதல் ஹைக்கூ கவிதை வடிவம் உருவானது. ஹைக்கூ 3 அடிகளில், முதல் அடியில் 5 அசைகள், இரண்டாம் அடியில் 7 அசைகள், மூன்றாம் அடியில் 5 அசைகள் என மொத்தம் 17 அசைகள் என்ற அமைப்பில் அமைந்திருக்கும். இது ஜப்பானியக் கவிதை வடிவம் ஆகும்.



ஐக்கூ கவிதை ஒக்கூ (hokku, ஃகொக்கூ) என்றே அழைக்கப்பட்டது. பின்னர் ஐகை என்று திரிந்து ஐக்கூ என்றாயிற்று. ஐக்கூ என்றால் அணுத்தூசி போன்ற சிறிய கவிதை என்று பாரதியார் தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இக்கவிதையின் பெயரை ஹொக்கு என்று பாரதியார் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஐக்கூ ஐ – கடுகு, கூ - உலகம் கடுகு போல் சிறிய கவிதை வடிவில் உலகளாவிய கருத்துகளைச் செறிவுடன் செறித்து வைக்கச் செப்பு போல் இடந்தரும் கவிதை வடிவே ஐக்கூ என்றும் பொருள் கூறுகின்றனர்.

17 அசைகளில் மிகக்குறைந்த சொற்களைக் கொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆழமான கருத்துகளை வெளிப்படுத்துகிறது.



ஜப்பானிய கவிதை வடிவம் உலக அளவில் பல்வேறு மொழிகளில் கலந்து ஹைக்கூ கவிதைகள் உருவாகத்தொடங்கின.

ஜப்பானிய ஹைக்கூ தந்தை பாஷோவின் ஹைக்கூ கவிதையே ஜென் தத்துவத்தில் எழுதப்பட்ட முதல் ஹைக்கூ கவிதையாக அமைகிறது.


முதன் முதலில் பாரதியார் சுதேசமித்திரன் இதழில் ஜப்பானிய கவிதை என்ற தலைப்பில் கட்டுரை எழுதி ஹைக்கூ கவிதையைத் தமிழில் அறிமுகப்படுத்தினார்.

ஹைக்கூக் கவிதைகள் பல மொழிகளில் எழுதப்பட்டாலும் தமிழில் ஹைக்கூ தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து முத்திரைப் பதித்துள்ளது.

இந்திய மொழிகளில் தமிழ் மொழியில் தான் ஹைக்கூ கவிதை நூல்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன. 1984ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை 450 கவிதை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழில் ஐக்கூ கவிதை துளிப்பா, குறும்பா, சிந்தர், கரந்தடி, விடுநிலைப்பா, மின்மினிக் கவிதை, வாமனக் கவிதை, அணில் வரிக் கவிதை என்று பலவாறாக வழங்கப்படுகிறது.

தமிழில் 1980களில் ஹைக்கூக் கவிதைகள் பல எழுதப்பட்டன. 1984இல் அமுதபாரதி எழுதிய புள்ளிப் பூக்கள் எனும் கவிதை நூலே தமிழில் எழுந்த முதல் ஹைக்கூ நூலாகும். ஐக்கூ அந்தாதி, அறிவுமதியின் புல்லின் நுனியில் பனித்துளி, ஈரோடு தமிழன்பனின் சூரியப் பிறைகள், கழனியூரனின் நிரந்தர மின்னல்கள் ஆகியன தமிழில் எழுந்த ஹைக்கூ நூல்கள் ஆகும்.



ஹைக்கூ கவிதைகள் மரபு மற்றும் புதுக்கவிதைகளை மிஞ்சி மிக ஆழமான கருத்துகளை மூன்று வரிகளில் நறுக்கென விளங்க வைக்கிறது. இயற்கை, சமூகம், அவலம், மனிதநேயம், அரசியல், பொருளாதாரம், மக்களின் வாழ்கை, வறுமை என அனைத்து பொருண்மைகளிலும் ஹைக்கூக் கவிதைகள் எழுதப்படுகின்றன.

# மாணவியர் படைப்புகள் - ஹைக்கூ

**ஏ. ரம்யா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

சாதிக்க நினைத்த
பெண்ணிற்குச் சிறை தண்டனை
திருமணம்

இயற்கையால் அமைந்ததை
மனிதர்கள் ஒதுக்குகிறார்கள்
மாதவிடாய்

பணம் கொடுத்து
வாழ்க்கையை வாங்குகிறார்கள்
பெண்கள்

நடுத்தரத்தைச் சேர்ந்தவன்
சொந்தவீடு கட்டிவிட்டான்
தன் கனவில்

வியாபாரம் சூடுபிடித்தது
பேரங்கள் பேசப்படுகின்றன
நிச்சய மேடையில்

மாயன அமைதி
ஆனால் சுடுகாடு இல்லை
தேர்வு அறை

அனைத்து மலர்களும்
வாடி இருக்கின்றன
கல்லூரி இறுதி நாள்

**வ. உமாமகேஸ்வரி**
**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

குழந்தையிடம் விளையாடவில்லை
கடன்காரனிடம் விளையாடுகிறான்
கண்ணாமூச்சி

எனக்குச் சிறகுகள் இல்லை
இருந்தாலும் பறக்கிறேன்
உணவைப் பார்த்ததும்

புரியாத மொழி புரிகிறது
தெரியாத மொழி தெளிவாகிறது
குழந்தையின் பேச்சு

அம்மாவிடம் அடிவாங்க
ஏங்குகிறது
அனாதைக் குழந்தை

அம்மாவிடம் இருந்து
கிடைத்துக் கொண்டே இருக்கிறது
திட்டு

கடன் இல்லை
இருந்தாலும் கை ஏந்துகிறான்
பிச்சைக்காரன்

பட்டிமன்றம் இல்லாமலேயே
வெற்றி பெறுவாள்
மாமியார்

**ரா. சத்யா**

**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

வானம் பார்த்த பூமி
தாகத்தோடு காத்திருக்கிறது
விவசாய நிலம்

மூளைச் சலவை
நாளும் செய்யப்படுகிறது
திருமண வயது

# நற்றமிழ்க்குடில்

அடகுக் கடை
ஏதுமில்லாமல் நாள்
விரைகிறது பொற்காலம்

வறண்ட நிலத்தில்
நீர் ஊற்றியது
முதல் காதல் நினைவு

திறந்த பின்னே
காற்றுடன் கதைக்கிறது
சன்னல் ஓர இருக்கை

பூக்களைப் பறிக்காதீர்
வீசியது காற்று
உதிர்ந்தன பூக்கள்

உழைக்கும் கரங்கள்
ஊதியம் கிடைத்தது
வெற்றி

**வி. மாரிகவிதா**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

சாலைத் தடைகள்
சிக்காமல் நகர்கிறது
நிழல்

# நற்றமிழ்க்குடில்

தனி மரம்
சரணாலயமாக மாறுகிறது
பறவைகள் வருகை

ஏழைக் குடும்பத்தினர்
அரண்மனை கட்டுகிறார்கள்
மணல் மேட்டில்

செதுக்கிய சிலை
கண்கள் திறக்கப்பட்டன
பாடசாலை

நாளும் வியந்தேன்
இரசித்து சுவைத்தேன்
தாய்மொழி

தேடினாலும் கிடைக்காத பொக்கிசம்
துயரத்திற்கு அருமருந்து
தோழியின் உரை

இறுதி வரை பதட்டம்
எதிர்காலத்தைக் கையாள்வதில்
அப்பாவின் வாழ்க்கை

வகுப்பறை
செதுக்கவும் திறக்கிறது
அறிவுக் கண்

ச. வினிதா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

தண்ணீருக்குள்
வாழ்வா? சாவா? போராட்டம்
வலைகளுடன் மீன்கள்

கத்தியால் வெட்ட
கண்ணீர் பெருகியது
உரித்த வெங்காயம்

இறுதியில் புரிகிறது
தொடக்கமே அழகு
கல்லூரி நாட்கள்

க. சுவாதி

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

கண்கள் கலங்கின
உதடுகள் சிரித்தன
பழைய டைரி

இலவசமாகக் கற்றுத் தருகிறது
பருவத்தோடு பாடத்தை
அனுபவம்

இணை சென்றாலும்
துணை தேடாமல் இருப்பது
அன்பு

துள்ளி குதித்து
பாடி மகிழ்ந்தாள்
சமையல் அறையில்

ஆயிரம் மனகவலையும்
சண்டைகளையும் மறந்து சிரித்தாள்
மழலையைப் பார்த்து

அறியாத மொழியில்
பேசி மகிழ்கிறது
மழலை

தனித்து நிற்கிறது
மரத்தில் கட்டிய ஊஞ்சல்
பருவமடைந்தும்

தாங்கி வளர்த்ததால்
தலை வணங்குகிறது
நெற்கதிர்

பறக்கத் தெரிந்தும்
பறக்க முடியாமல் தவிக்கிறது
கூண்டுப் பறவை

**பா. அபிநயா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

காய்ந்து போன சருகுகள்
கூட்டமாகப் பேசுகின்றன
மக்களின் சலசலப்பு

சீருடைச் சிறுமி
பாரம் சுமக்கிறாள்
தலையில்

பெரும் அமைதி
தூரத்தில் கேட்கிறது
பறை இசை

உடைந்த உண்டியல்
சில்லறையுடன் சிதறின
கண்ணீர்த் துளிகள்

சேர்த்த பணங்கள்
கணக்கில் இல்லை
வெள்ளை வேட்டி

**அ. பவித்ரா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

கனவுகள் கண்ட
கலைமகள் விழித்தாள்
கையில் கரண்டி

பருவங்கள் மாறினாலும்
மாறாமல் மறைகிறது
பெண்ணின் வாழ்வு

அயராத உழைப்பு
வீடு திரும்பியதும்
உணரும் களைப்பு

சிறகு முளைத்த பறவை
கூட்டில் பதுங்கியது
பழிச்சொல்

**ரோ. ஷீலா**

**இளங்லைத்தமிழ் மூன்றாமாண்டு**

வானுயர்ந்து மின்னியது
கரைசேர வழிகாட்டும்
கலங்கரை விளக்கு

மதிப்பிட இயலவில்லை
தேடிச் சேர்த்ததை
அன்பு

# நற்றமிழ்க்குடில்

தூண்டிலில் மாட்டிய மீன்
வாய் திறக்க முடியாது
திருமண வாழ்வு

புன்னகைத்த பூக்கள்
இறுதியில் வாடின
பிரிவு

உயிருக்கு உத்திரவாதமின்மை
நெடும் பயணம்
மீனவன்

ஆடியில் ஒரு முகம்
அகத்தில் பல முகம்
மனிதன்

**கு.க. மகாலட்சுமி**
**முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு**

குடிசை வீடு
கட்டணமில்லாத விளக்கு
நிலா

மொட்டுகள் மலர மலர
வாடியது முகம்
பூக்காரி

**சா. பவித்ரா**
**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

சிந்தனை சிதறுவதே
வாழ்வின் வழக்கமானது
குழப்பம்

பயணப் பாதையில்
இறுதிப் பயணம்
மயானம்

இலக்கணத்தைக் கற்பித்தது கல்வி
வாழ்வினைக் கற்பிக்கிறது
அனுபவம்

என்னைப் போல்தான்
படிக்காமல் புரட்டுகிறது
புத்தகத்தைக் காற்று

# நற்றமிழ்க்குடில்

சதையோடு வளர்க்கப்பட்ட நகங்கள்
வெட்டப்படுகின்றன
உறவுகள்

மங்கைகளை மதித்தவர்கள்
நங்கைகளை நசுக்கினார்கள்
வார்த்தைகளால்

நிறத்தால் மாற்றமடையும்
பச்சோந்தி
குணத்தால் மனிதர்கள்

**வெ. அபிராமி**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

விடிந்ததும் முடிந்து விடுகின்றது
கம்பத்தின் வாழ்வு
தெருவிளக்கு

விடுமுறை இன்றி
நாளும் வேலை
சமயலறை

# நற்றமிழ்க்குடில்

நன்றியுள்ள நாய்
வாலை ஆட்டியது
திருடனுக்கு

பசியில் எரியும்
வயிற்றுக்கு அமிர்தமானது மூலைக்கடைத்
தேநீர்

இத்தனை வர்ணனைக்குப் பிறகும்
தன்னிலை மாறவில்லை
நிலவு

மனிதனை மனிதாக்குவது
வாழ்விற்கு வழிகாட்டுவது
அனுபவம்

நீரில் மிதக்கும் இலை
தாமதமாக வந்தது
மழை

**செ. ரூபிகா**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

மரங்கள் விழுகின்றன
வெட்டுவதால் இல்லை
வெப்பத்தால்

சண்டை இல்லாமல்
கொல்லும் ஆயுதம்
பொறாமை

மகனுக்குப் பிறந்தநாள்
வாழ்த்த ஏங்கும் தாய்
முதியோர் இல்லம்

பெய்யும் மழை
குடைக்குள் கொட்டுகிறது
தேனீக்கள் கூட்டம்

**பெ. பிரீத்தி**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

விறுவிறுப்பான களம்
சிந்திக்க வைத்தது
கருப்பு வெள்ளை ஆட்டம்

புத்தகத்தைத் தொட்டுத்
தழுவிப் படித்தார்கள்
பார்வையற்றோர்கள்

**த. பிரியங்கா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

கட்டாயம் என்றது
கனவாய் மாறியது
கல்வி

வெற்றுக் காகிதம்
நிரப்பப் படுகிறது
நட்பின் நேசம்

**ரா. காவியா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

உறங்க விடாமல் செய்கின்றன
பாய்க் குச்சியும்
சிலரின் வாய்பேச்சும்

செய்யும் தவறு
காணாமல் போகிறது
அம்மாவின் அன்பு

**பா. லோகேஸ்வரி**
**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

இறங்காமல் தொடர்ந்து
ஏறிக்கொண்டே செல்கிறது
நாளும் விலைவாசி

எல்லையற்ற பயணம்
தொடர்ந்து நகரும்
வெற்றியின் இலக்கு

மாத இறுதி
கூடிக் கொண்டே இருக்கிறது
கடன் வட்டி

**ஆ. நிர்மலா**
**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

சன்னல் கம்பிகளில்
சிக்கிக் கொண்டது
கட்டிடங்களுடன் இயற்கை

விண்வெளித் தோட்டத்தில்
நட்சத்திரப் பூக்கள்
மழலைகள்

படிக்காமல் பட்டம்
பெறத் துடிக்கிறது
மாணவனின் மனம்

சிலருக்கு வேதவாக்கு
பலருக்கு வேற்றுச்சொல்
அறிவுரை

**து. வினிதா**
**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

வீட்டின் கதவுகள்
மூடியே இருக்கின்றன
உறவுகளின் பிணைப்பு

பூமாலை தோள்மாறுகிறது
காகிதம் கையெழுத்தாகிறது
ஏமாற்றம்

**மு.ஹரிணி**
**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

விடுமுறை நாளுக்காக
நாள்காட்டியைக் கிழிக்கிறாள்
மனைவி

இரவுப் பொழுது
வரவே இல்லை
உறக்கம்

ந. வினோதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

மொட்டை மரம்
ஒற்றை இலை ஊசலாடுகிறது
வாழும் ஆசை

ஓட்டப்பாதை சீராக இல்லை
ஓடியே தீர வேண்டும்
வாழ்க்கை ஓட்டம்

மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது
நினைத்தது நடந்தது
நினைவுகள்

க. காவியா
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

நிழலுக்கு ஒதுங்குவதற்காய்
கூடாரம் அமைக்கிறான்
மரங்களை வெட்டி

எங்களை வாழ விடுங்கள்
உங்களை வாழ வைக்கிறேன்
மரங்கள்

உணவுத் தேவை
நாளும் வளருகிறது
அறிவியல் தொழில்நுட்பம்

பயணிப்பவன் வெல்கிறான்
நிற்பவன் தின்கிறான்
காலம்

**ச. அகிலா**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

பச்சை இலைகள்
உறவாடுகின்றன கிளைகள்
கிளிகள் கூட்டம்

விழுதுகள் தளர்ந்தும்
விழாத ஆலமரங்கள்
முதியோர் இல்லங்கள்

வாரி எடுத்த கூட்டத்தில்

வழுக்கி விழுந்தவன் சாபம் பெற்றான்

மனிதனாய்

**ரா. அனுசுயா**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

சலசலத்த ஆட்டம்

பூமியில் அடைக்கலம்

காய்ந்த இலைகள்

**து. லீலாவதி**

**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

மாதங்கள் கடக்க

அசைவில் மனம் நெகிழ்கிறது

வயிற்றில் கரு

பாதைகள் கடினம்

நம்பிக்கையோடு பயணிக்கிறேன்

இலக்கை நோக்கி

தலைவணங்குகிறது என் சிரம்
உரமாகிறது என் உரை
தமிழ் வளர

உள்ளுக்குள்
உறையும் தெய்வம்
அப்பா

**ம. நந்தினி**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

நல்ல எண்ணங்கள்
மாற்றம் தந்து மகிழ்விக்கும்
நேர்மறைச் சிந்தனை

வாட்டும் தாகம்
மேகத்தை நோக்குகின்றன
உயிரினங்கள்

**கு. சங்கீதா**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

இயற்கையின் கோபம்
இடர் செய்கிறது
சுனாமி

கைகளில் ஏந்திய நொடி
கரைந்து போகிறது
பனிக்கட்டி

**சே. செளந்தரியா**
**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

பிறப்பிற்கும், இறப்பிற்கும்
நிற்காது சுழலும்
காலம்

கோப மூகமூடி
அன்பின் மறு உருவம்
அப்பா

**கா. கவிதா**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

அனுமதியின்றி நுழைந்து
உறக்கத்தைக் கலைக்கிறது
கதிரொளி

காடு மேடு
கடக்கும் நீரோடை
எனக்கு முன்னோடி

கையில் விலங்கிடப்பட்டவளுக்குப்
புத்தகம் பரிசளிக்கப்பட்டது
திருமணம் – கல்வி

**ரா. வினோதினி**
**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

தினமும் தொடுகிறேன்
உன்னை இல்லை
தொடுதிரையை

சாதி ஒழிப்பும் தேவை
சாதிக்காரன் ஓட்டும் தேவை
கரை வேட்டிக்காரன்

கூடுதல் நேரம்
மகளுக்காக உழைக்கிறார்
கூலித் தொழிலாளி

மின்மினிப் பூச்சிகள்
இரவில் ஒளிர்கின்றன
நட்சத்திரங்கள்

**மே. சாருமதி**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

ஒவ்வொரு அறையிலும்
குவிந்து கிடக்கின்றன மாணிக்கங்கள்
மாணவர்கள்

தடுமாறி நடக்க
பின்னோக்கிச் செல்கிறது மரம்
குடிபோதை

இருட்டு அறையில்
கால்பந்து விளையாடும்
கண்மூடிய சிசு

குடியை மறந்தவன்
இன்று நடக்கிறான்
சிறந்த குடிமகனாய்

கரும்பலகையில்
வெள்ளை ஓவியம் தீட்டப்பட்டு
கல்லூரி வாழ்வு

அனைத்தும் அடங்க
அலைபாய்கிறது ஒன்று
மனம்

**ஏ. சூர்ய கலா**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

குற்றங்களுக்கு தண்டனை
வழங்காத ஒரே நீதிபதி
அம்மா

**பா. உமா மகேஸ்வரி**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

மேகப் பொம்மைகள்
காற்றில் கலைந்து போயின
யாரும் வராததால்

நினைவுகளாகத் தோன்றின
தென்றலும் புயலுமாய்
மனம் தொடும் காற்று

கனவில் தினமும்
தோள் சாய்கிறாள்
உயிர் பிரிந்த தோழி

ஊரைச் சுற்றும்
திருந்தாத பிள்ளைக்காக
கோவில் சுற்றும் அம்மா

**பவித்ரா. சீ**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

சொருகிய அடுக்குகள்
பிரித்தாலும் பிரியாத மடிப்புகள்
விசிறி வாழை

**சி. சிவதர்ஷினி**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

தூண்டில் மீன்
விடுதலை பெற்றது
மனிதனின் பசி

**ச. பிருந்தா**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

ஓயாத ஓட்டம்

அங்கேயே சுற்றுகின்றன

கடிகார முட்கள்

**அ. தௌலத் நிஷா**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

முக்கால அறிவையும்

அடுப்படியில் தொலைத்தவள்

அம்மா

**ஏ. லாவண்யா**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

முற்றும் முன்பே

சுவையாக உள்ளது

மாவடு

**ஏ. ஷாலினி**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

தூசி படியவில்லை
ஊதிப் பருகுகிறாள்
சூடான தேநீர்

**ம.ல. உமா சங்கரி**

**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

வலிமைமிகுக் கால்கள்
இருந்தும் ஊர்கிறது
பேருந்து

**ஏ. புவனேஸ்வரி**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

வெயிலில்  நிற்கிறது
தனிமையில்
நிழற்குடை

**அ. டாப்னி பிலோமினா**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

தோள் கொடுப்பான்
உற்ற துணையாக
இணையம்

**ரா. வினிஷா**
**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

காலங்காலமாகக் காத்திருந்தாலும்
கரம்பிடித்து மனம்முடிக்க காலம் வரவில்லை
பேருந்துநிறுத்தம்( வேண்டாம்)

**உ. புவனப் பவித்ரா**
**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

நீண்ட கரும்பாம்பு
நடந்து செல்ல பயமில்லை
தார்ச்சாலை

ஈ. ஹரிணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

இணையாமல்
பயணம் செய்கின்றன
தண்டவாளங்கள்

ம. லட்சுமிபிரியா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

நா அசைவில் பிறப்பவள்
நடுநடுங்கச் செய்பவள்
சொல்

ரா. பர்மிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

என் தொடுதலில்
முகம் மலர்கின்றன
அலைபேசி திரை

**ரா. ரேகா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

வகுப்பில் அமைதியாய்
உள்ளுக்குள் புரட்சிக்கு விதை
நூல்கள்

**ர. சாமுண்டீஸ்வரி**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

காற்றின் அழுத்தத்தில்
கரு உருகொண்டன
சொற்கள்

**ர. பிரமிளா**

**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

வாரி அணைக்க
மயிலிறகாய் குத்துகிறது
அப்பாவின் மீசை

**ர. மகாலட்சுமி**

**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

நீருடன் சேர்ந்திருந்தாலும்

ஈரமானதில்லை

திருநீரு ( வேண்டாம்)

**இர. லோகேஸ்வரி**

**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

கால்கள் இடம் மாறி

கைகள் பேசுகின்றன

குறுஞ்செய்தி ( வேண்டாம்)

**முன் பக்கம் மற்றும் பின் பக்கம்**

**அட்டைப்படம்**

**கல்லூரியில் உள்ள மரங்களில் ஒன்றான**

## நாவல் மரமும் மலர்களும்

# துறை நிகழ்வுகள்

## பாரதியார் உலா - 06.01.2025










# சிறுதானியங்கள் திருவிழா – 06.02.2025









# இரண்டு நாள் கவிதைப் பயிலரங்கம்

# 12.02.2025 - 13.02.2025






# திருக்குறள் விழாப் போட்டிகள்

# 19.02.2025





# திருக்குறள் விழாப் போட்டிகள்

# 19.02.2025



## நூலகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பார்வையிடல் – 04.03.2025





## நூலகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பார்வையிடல் – 04.03.2025






நாவல்மரம்
Jamun Tree
Syzygium cumini L